



கல்வி பொது தராதரப் பத்திரம் (சாதாரண தரம்)

# கத்தோலிக்கத் திருமறை

# வினா விடைகள்

# 2019

வெளியீடு: தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்

**கல்வி பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2019**

**கத்தோலிக்கத் திருமறை**

---

## பகுதி I

**(சரியான விடை கோடிட்டு காட்டப்பட்டுள்ளது)**

01. பவுலின் அறிவுரைப்படி அவரின் சீடரால் எழுதப்பட்ட திருமுகங்களில் ஒன்று

1) 1 திமொத்தேயு
2) எபேசியர்
3)உரோமையர்
4) தீத்து

02. திருவெளிப்பாட்டு இலயக்கியத்தில் மரணத்தைக் குறிக்கும் நிறக் குறியீடு

1) வெளிறிய நிறமாகும்
2) சிவப்பு நிறமாகும்
3) கறுப்பு நிறமாகும்
4) வெள்ளை நிறமாகும்

03. திருவெளிப்பாட்டு நூலின் எழுத்தாளராக முன்வைக்கப்படுபவர்.

1) திருத்தூதர் பேதுரு ஆவார்
2) திருத்தூதர் யோவான் ஆவார்
3) திருத்தூதர் யாக்கோபு ஆவார்
4) திருத்தூதர் பர்னபா ஆவார்

04. ஞான இலக்கியத்தில் அடங்கும் ஒரு நூல்

1) இனிமைமிகு பாடலாகும்
2) பாரூக்காகும்
3) புலம்பலாகும்
4) யூதித்தாகும்

05. எபிரேய ஞானத்தின் பிரிவுகளில், வாழ்க்கையின் அர்த்தம் அதன் சிக்கல்கள், தீர்வுகள் பற்றிய கருத்தியலை உள்ளடக்கிய விளக்கத்தினைன் குறிப்பிடுவது,

1) அரசசபை ஞானம் என்றாகும்
2) அன்றாட வாழ்க்கைப் பற்றிய ஞானம் என்றாகும்
3) குடும்பம் அல்லது கோத்திர ஞானம் என்றாகும்
4) ஆன்மீக ஞானம் என்றாகும்

06. ஏரோதின் எந்த கேள்விகளுக்கும் இயேசு பதிலளிக்காததால் அவன் இயேசுவை என்ன செய்தான்?

1) சீசர் அரசனிடம் அனுப்பினான்
2) பரபாசை முன்வைத்தான்
3) அரசமாளிகைக்குள் அழைத்துச் சென்று வினவினான்
4) மீண்டும் பிலாத்துவிடம் அனுப்பினான்

07. இயேசு தமது உயிர்ப்பின் எட்டு நாட்களுக்குப் பின்னர் யாருக்குக் காட்சி கொடுத்தார்?

1) புனித பேதுருவிற்கு
2) புனித பவுலுக்கு
3) புனித தோமாவிற்கு
4) புனித யோவானுக்கு

08. சவுலுக்கு திருமுழுக்குக் கொடுத்தவர் யார்?

1) அனனியா
2) பர்னபா
3) திருமுழுக்கு யோவான்
4) பேதுரு

09. புனித பவுலை சிரச்சேதம் செய்து கொலை செய்யக் கட்டளையிட்டது யார?

1) அவுரேலியன்
2) திராஜன்
3) நீரோ
4) ஏரோது அந்திபஸ்

10. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்தவுடன் கி.பி. 1543 இல் இந்நாட்டுக்கு வரவழைத்துக் கொண்ட மறைபோதகக் குழுவினர் யார்?
    1) அமலமரித் தியாகிகள் சபை மறைபோதகர்கள்
    2) பெனடிக் சபை மறைப் போதகர்கள்
    3) ஒறத்தோறியன் சபை மறைப் போதகர்கள்
    4) பிரான்சிஸ்கன் சபை மறைப் போதகர்கள்

11. “தனது நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட .............. யாரிடமும் இல்லை” இடைவெளிக்கு பொருத்தமான விடை
    1) சிறந்த அன்பு    2) சிறந்த உள்ளம்
    3) சிறந்த சகோதரத்துவம்    4) சிறந்த சிந்தனை

12. ‘மரியாயின் மாசற்ற இருதயச் சேனை’ என்ற சபையை ஆரம்பித்தவர்
    1) பெற்றிக் ஓசான்னம் அடிகளார் ஆவார்
    2) புனித மக்ஸிமிலியன் கோல்பே அடிகளார் ஆவார்
    3) திருத்தந்தை XXIII ஆம் அருளப்பர் ஆவார்
    4) திருத்தந்தை II ஆம் அருளப்பர் சின்னப்பர் ஆவார்

13. ‘சுப செத்கெதர’ வை தனது வசிப்பிடமாகக் கொண்ட தேசிய மறைப் போதகக் குருவானவர்
    1) புனித யோசேவாஸ் அடிகளார் ஆவார்.
    2) அருட்பணி மோசே அடிகளார் ஆவார்.
    3) அருட்பணி மைக்கல் றொட்றிகோ அடிகளார் ஆவார்.
    4) அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் ஆவார்.

14. “பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்கு முற்றிலும் கீழ்ப்படியுங்கள்: ஆண்டவரைச் சார்ந்தவர்களுக்கு இதுவே தகும்.” இவ்வார்த்தைகள் குறிப்பிடப்பட்டிருப்பது,
    1) சபை உரையாளர் நூலில் ஆகும்    2) சீராக்கின் ஞானம் நூலிலாகும்
    3) கொலோசையர் திருமுகத்தில் ஆகும்    4) எபேசியர் திருமுகத்தில் ஆகும்

15. மதுபானம் அருந்துதல் மற்றும் புகைப்பிடித்தல் தவறான செயல் எனப் பத்துக்கட்டளைகளில் .................. எடுத்துகாட்டப்படுகிறது.
    1) ஐந்தாம் கட்டளையில்    2) ஏழாம் கட்டளையில்
    3) எட்டாம் கட்டளையில்    4) பத்தாம் கட்டளையில்

16. “உண்மைக்கெல்லாம் ஊற்றாக இருப்பவர் இறைவனே: அவருடைய வார்த்தை உண்மை உள்ளது. அவருடைய திருச்சட்ட உண்மையுள்ளது.” இவ்வாறு குறிப்பிட்டிருப்பது,
    1) திருத்தூதர்களின் டிடாக்கே நூலில் ஆகும்
    2) பெரிய குறிப்பிடத்தில் ஆகும்
    3) சிறிய குறிப்பிடத்தில் ஆகும்
    4) கத்தோலிக்க திருச்சபை மறைக்கல்வி நூலில் ஆகும்

17. கிறிஸ்துவின் திருமுழுக்குத் திருவிழாவின் மறுநாள் தொடக்கம் விபூதிப் புதனுக்கு முதல்நாள் வரையான காலம் உட்படுவது,
    1) பாஸ்கா காலத்திற்காகும்
    2) பொதுக் காலத்தின் முதற் பகுதிக்காகும்

3) பொதுக்காலத்தின் இரண்டாம் பகுதிக்காகும்
4) தவக்காலத்திற்காகும்

18. திருப்பலியில் இடம்பெறும் காணிக்கைப் பவனி உட்படுவது,
1) ஆரம்பச் சடங்கிற்குள் ஆகும்
2) மனத்துயர் வழிபாட்டுப் பகுதிக்குள் ஆகும்.
3) பீடத்தை ஆயத்தம் செய்யும் சடங்கிற்குள் ஆகும்.
4) நற்கருணை விருந்து பகுதிக்குள் ஆகும்

19. திருப்பலியின் பிரதான மன்றாட்டு ஆவது,
1) நற்கருணை மன்றாட்டாகும்
2) திருப்புகழ் மாலை மன்றாட்டாகும்
3) நம்பிக்கையாளரின் மன்றாட்டாகும்
4) காலை மன்றாட்டாகும்

20. உன்னத குருவின் வேண்டுதலைக் குறிப்பிடும் புதிய ஏற்பாட்டின் ஒரேயொரு நற்செய்தியாளர்
1) புனித லூக்கா ஆவார்
2) புனித மத்தேயு ஆவார்
3) புனித மாற்கு ஆவார்
4) புனித யோவான் ஆவார்

21. யாவே மரபிற்குரிய இரண்டு கதைகள்,
1) படைப்பின் முதற்க கதை, நோவாவுடன் உடன்படிக்கை என்பனவாகும்
2) ஆதாம் - ஏவாள் பாத்தில் விழுதல், காயின் - ஆபேல் கதை என்பனவாகும்
3) காயின் - ஆபேல் கதை, ஈசாக்கைப் பலியிடுதல் என்பனவாகும்
4) ஈசாக்கை பலியிடுதல், யாக்கோபு பெத்தேலில் கண்ட கனவு என்பனவாகும்

22. எழுத்து வடிவம் பெறாத, இறைவாக்கினரை மட்டும் கொண்ட தெரிவு,
1) எரேமியா, குல்தா
2) எலியா, எசாயா
3) நாத்தான், எலியா
4) நாத்தான், ஒசேயா

23. நெருப்புப் பொறியினால் உதடுகள் தூய்மையாக்கப்பட்ட இறைவாக்கினர்,
1) எரேமியா ஆவார்
2) ஒசேயா ஆவார்
3) நாத்தான் ஆவார்
4) எசாயா ஆவார்

24. புனித மாற்கு நற்செய்தியைக் குறிக்கும் இன்னுமொரு பெயர்,
1) ஏழைகளின் நற்செய்தியாகும்
2) பாடுகளின் நற்செய்தியாகும்
3) ஆன்மீக நற்செய்தியாகும்
4) பெண்களின் நற்செய்தியாகும்

25. புனித லூக்கா நற்செய்தி ஆரம்பிக்கப்படுவது,
1) இயேசுவின் பிறப்பின் நிகழ்வுடனாகும்
2) இயேசுவின் தலைமுறை அட்டவணையுடனாகும்
3) குருவாகிய சக்கரியா பலி ஒப்புக்கொடுக்கும் நிகழ்வுடனாகும்
4) திருமுழுக்கு யோவானின் போதனையுடனாகும்

26. புனித யோவான் நற்செய்தியின் நோக்கம் என்ன?
1) நம்பிக்கையை ஏற்படுத்துதல்
2) இயேசுவின் அதிகாரத்தை எடுத்துக்காட்டுதல்

3) இயேசு குணமளிப்பவர் எனக் கூறுதல்
4) இயேசு ஓர் ஆசிரியர் எனக் கூறுதல்.

27. இயேசுவை பின்சென்ற செபதேயுவின் புதல்வர்கள் இருவரும்,
1) பேதுருவும் அந்திரேயாவும் ஆவர்
2) யோவானும் அந்திரேயாவும் ஆவர்
3) பேதுருவும் யோவானும் ஆவர்
4) யோவானும் யாக்கோபுவும் ஆவர்

28. தொடக்க நூலில் முதலாம் அதிகாரம் தொடக்கம் பதினோராம் அதிகாரம் வரையான பகுதி,
1) தார்மீக வரலாறு எனப்படும்
2) உலகலாவிய வரலாறு எனப்படும்
3) வரலாற்றுக்கு முற்பட்ட காலம் எனப்படும்
4) விஞ்ஞானமய வரலாறு எனப்படும்

29. படைப்பு பற்றிய இரண்டாவது கதை எந்த மரபைச் சேர்ந்த ஆக்கமாகும்?
1) குரு மரபை
2) யாவே மரபை
3) எலோகிம் மரபை
4) இணைச்சட்ட மரபை

30. திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து கொண்டுவரும்படி ஏரோதிடம் கேட்டது யார்?
1) ஏரோதியாளின் மகள் ஆவார்
2) ஏரோதின் மகள் ஆவார்
3) ஏரோதின் மகன் ஆவார்
4) தலைமை அமைச்சர் ஆவார்

31. தனது தனிப்பட்ட புகழுக்காக மட்டும் செயற்படக் கூடாது என்பதை எடுத்துக்காட்டுவது, இயேசுவின்
1) முதல் போதனையாகும்
2) இரண்டாவது போதனையாகும்
3) மூன்றாவது போதனையாகும்
4) நான்காவது போதனையாகும்

32. இறை அரசு என்பது,
1) விடுதலைப் பெற்ற சுதந்திரமான ஒரு இடமாகும்.
2) அடிக்கடி திருமணித்தியாலம் ஒப்புக்கொடுப்பதாகும்.
3) தான் குற்றமற்றவர் என சிந்திக்கும் இடமாகும்.
4) இறை விருப்பத்திற்கும் ஆட்சிக்கும் இடங்கொடுப்பதாகும்.

33. உறுதிப்பூசுதலை வழங்கும் முதல் தகுதிபெற்ற பணியாளன் யார்?
1) குருவானவர்
2) ஆயர்
3) திருத்தொண்டர்
4) அருட் சகோதரர்

34. திருப்பாடல் 51:17 இல் குறிப்பிடப்படும், இறைவனுக்கு காணிக்கை யாது?
1) மாசுபடாத மிருகம்
2) தூபப் பலி
3) நொறுங்கிய உள்ளம்
4) முதல் அறுவடை

35. ‘நோயாளியின் தூய பூசுதல்’ என்னும் அப்போஸ்தலிக்கப் படிப்பினையை எழுதியவர்
1) திருத்தந்தை VIவது சின்னப்பர் ஆவார்.
2) திருத்தந்தை IIவது அருளப்பர் சின்னப்பர் ஆவார்.
3) திருத்தந்தை Xவது பந்திநாதர் ஆவார்.
4) திருத்தந்தை XXIIIவது அருளப்பர் ஆவார்.

36. பின்வரும் A, B, C, D ஆகிய கூற்றுக்களை கவனிக்குக.
A - பெற்றோரின் வயோதிப நிலையில் அவர்களை பராமரித்தல்.

B - அன்னியோன்னிய அன்பால் முழுமையடைதல்.
C - சகோதர சகோதரிகளுடன் ஒற்றுமையாக இருத்தல்.
D - குழந்தைப் பேறும் அவர்களை வளர்த்தலும்.

மேலே கூறப்பட்டுள்ளவற்றுள் கிறிஸ்தவ திருமணத்தின் குறிக்கோள்களாவன.

1) A, B 2) A, D 3) B, C 4) B, D

37. ஏழைகளுக்கு உதவி செய்து, அன்பு செய்ய நமக்கு மிகச் சிறப்பாக வழிகாட்டும் புனித வின்சன்ட் டீ போல் சபையை ஆரம்பித்தவர்,

1) ஆயர் புனித காடையின் ஆவார் 2) புனித பிறடிக் ஓசான்னம் ஆவார்
3) புனித பேதுரு ஆவார் 4) புனித ஜெரோம் ஆவார்

38. படைப்பு பற்றிய இரண்டாவது கதையின் படி பயிரிடுதல் என்பதற்குப் பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல்

1) அபாத் என்பதாகும் 2) றாபா என்பதாகும்
3) ஷாமார் என்பதாகும் 4) கப்பத்தா என்பதாகும்

39. உள்ளார்ந்த அமைதியைக் குறிக்கும் எபிரேயச் சொல்

1) இஸ்ரயேல் 2) ஷாலொம் 3) அகாப்பே 4) பிரெஸ்பிட்டரோய்

40. கர்த்தர் கற்பித்த செபத்தை எழுதியுள்ள இரு நற்செய்தியாளர்களும் யாவர்?

1) புனித யோவானும் புனித மத்தேயுவும் ஆவர்
2) புனித மத்தேயுவும் புனித மாற்குவும் ஆவர்.
3) புனித மாற்குவும் புனித யோவானும் ஆவர்.
4) புனித லூக்காவும் புனித மத்தேயுவும் ஆவர்.

## பகுதி - II

(01) i. திருத்தூதர் பணி நூலை எழுதிய புனித லூக்கா பற்றி நீர் அறிந்த இரு விடங்கள் எழுதுக.

- இயேசு உலகனைத்திற்கும் மீட்பர் என்பதை எடுத்துகாட்டுவதே இவரது நோக்கம்.
- மருத்துவர், ஓவியர், வரலாற்று ஆசிரியர்.
- கிரேக்க மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்.
- புனித பவுலின் தூதுரைப் பயணத்தின் தோழர்.
- தனது நூலை கி.பி 80 - 85இல் சிரிய அந்தியோக்கியாவில் எழுதினார்.

ii. வெளிப்பாட்டு இலக்கியத்தின் பண்புகள் இரண்டு குறிப்பிடுக.

- இரட்டை வாதம்
- குறியீடு பயன்படுத்தப்படுதல்

iii. ஆரம்பத் திருச்சபையின் பண்புகள் இரண்டு தருக.

- திருத்தூதர்களின் படிப்பினைகளைக் கேட்டல்.
- அன்புறவு
- அப்பம் பிடுதல்
- செபித்தல்

iv. அருட்பணி யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளார் இந்நாட்டிற்கு ஆற்றிய சேவைகள் இரண்டு எழுதுக.

**தமிழ், சிங்கள் மொழிகளில் பல புத்தகங்களை எழுதியுள்ளார்.**

- தேவ புராணம்
- வேத காவியம்
- பசான்/வியாகுல பிரசங்கம்
- மங்கள கீதம்

**கத்தோலிக்க இலயக்கியத்தை வளர்த்தார்.**

கத்தோலிக்க நாடகங்கள்
கத்தோலிக்க கவிதைகள்
கத்தோலிக்க இசை

v. யூத பாஸ்கா உணவில் முக்கியத்துவம் பெற்றவை நான்கில் இரண்டினைப் பெயரிடுக.

- பாஸ்கா செம்மறி
- புளியாத அப்பம்
- கசப்பு கீரை
- திராட்சை இரசம்

vi. புனித லூக்கா நற்செய்தியை அறிமுகம் செய்யும் வேறு இரு பெயர்களைப் பெயரிடுக.

- ஏழைகளின் நற்செய்தி
- புற இனத்தவரின் நற்செய்தி
- இரக்கததின் நற்செய்தி
- பெண்களின் நற்செய்தி

- செபத்தின் நற்செய்தி
- தூய ஆவியின் நற்செய்தி
- புகழ்ச்சியின் நற்செய்தி

vii. திருமுழுக்கு யோவானின் பிறப்பின் எட்டாம் நாள் நிறைவேற்றிய சடங்குகள் இரண்டினைக் குறிப்பிடுக.

- விருத்தசேதனம்
- பெயரிடல்

viii. புனித லூக்கா 4: 18-19 இன்படி இயேசுவின் தூதுப் பணியிள் மூலம் நல்வாழ்வைப் பெற்றுக்கொடுத்த இரு குழுவினரைக் குறிப்பிடுக.

- ஏழைகள்
- அடிமைகள்
- ஒடுக்கப்பட்டோர்
- பார்வையற்றோர்

ix. சுய நம்பிக்கையின் மீது இயேசுவிடம் குணமடைந்த நோயாளர் இருவரை பெயரிடுக.

- எரிக்கோவின் பார்வையற்றவர்
- இயேசுவின் ஆடையின் விளிம்பைத் தொட்ட பெண் (இரத்தப் போக்குடைய பெண்)

x. விதைப்பவன் உவமையில் குறிப்பிடப்படும் விதைகள் விழுந்த இரு வகை நிலங்களைக் குறிப்பிடுக.

- வழியோரம்
- பாறை நிலம்
- முட்புதர்களுக்கிடையில்
- நல்ல நிலம்

(02) i. இஸ்ரயேலின் பலிகளின் இரு பிரிவுகளையும் எழுதுக.

- தனப்பலி
- எரிப்பலி ∴ தானியப் பலி

ii. மெல்கிசதெக் என்னும் குரு வாழ்ந்த நகரத்தைப் பெயரிட்டு, அவர் முதன் முறையாக கடவுளுக்கு ஒப்புக்கொடுத்தவை யாவை என எழுதுக?

- நகரம் - எருசலேம்
- ஒப்புக்கொடுத்தவை - அப்பமும் இரசமும்

iii. இயேசு தமது சீடர்களின் பாதங்களை கழுவிய செயலின் மூலம் உமது வாழ்க்கைக்குக் கற்றுக்கொள்ளக் கூடிய படிப்பினைகள் ஐந்தினை எழுதுக.

- இயேசுவின் முன்மாதிரிகையைப் பின்பற்றி பிறருக்கு பணிவிடை செய்தல்.
- இயேசுவைப் போல் தாழ்ச்சியாக இருக்க ∴ வாழ வேண்டும்.
- பாகுபாடின்றி அனைவரையும் சமமாக நடத்த வேண்டும்.
- இயேசுவைப் போல் அனைவரது நன்மைக்காகவும் உழைக்க வேண்டும்.
- இயேசுவைப் போல் எனது வாழ்வும் வார்த்தையும் ஒன்றாக இருக்க வேண்டும்.

(03) i. திருப்பலிக்குத் தலைமைதாங்கும் குருவானவரின் மூன்று செபங்களில் இரண்டினைக் குறிப்பிடுக.
- காணிக்கை மீது மன்றாட்டு
- நற்கருணைக்கு பின் மன்றாட்டு

ii. தூய நற்கருணையின் சிறப்பியல்புகளில் மூன்றினை எழுதுக?
தேவநற்கருணை ஓர் அருளடையாளம்
- இது ஓர் ஆன்ம உணவு
- இது ஒரு பலி
- இது ஓர் உடன்படிக்கை
- இது ஒரு நன்றி பலி
- இது ஒரு நினைவுகூரல்

iii. திருப்பலியில் சிறந்த முறையில் பங்கேற்க கிறிஸ்தவர்களாகிய எம்மால் நிறைவேற்றப்பட வேண்டிய செயல்கள் ஐந்தினை விளக்குக.
- வருகைப் பாடல் முதல் இறுதிப் பாடல் வரை திருப்பலியில் முழுமையாக பங்கெடுப்பேன்.
- திருப்பலிக்கு தகுதியான முறையில் ஆன்ம, உடல் ரீதியாக என்னைத் தயார் செய்து கொள்வேன்.
- திருப்பலியில் ஆர்வத்துடன் பங்கெடுப்பேன்.
- நற்கருணையை பக்தியுடன் பெற்றுக்கொள்வேன்.
- திருவிவிலிய வாசகங்களையும் பிரசங்கத்தினையும் கவனமுடன் செவிமடுப்பேன்.
- அந்த கிழமைக்கான நல்ல தீர்மானங்களை எடுப்பேன்.
- இயேசுவின் அன்பிற்கு சாட்சியாக வாழுவேன்.
- காணிக்கையில் பங்கெடுப்பேன்.

(04) i. தனியார் சொத்துக்களை கையாள வேண்டிய முறைப் பற்றி நமக்கு கட்டளையிடும் இறை கட்டளைகள் இரண்டையும் எழுதுக.
- 7வது கட்டளை
- 10வது கட்டளை

ii. கெத்சமனித் தோட்ட செபத்தின் மூலம் சக்தியை பெற்றுக்கொள்ளாத திருத்தூதர்கள் இயேசு பிடிபட்ட பின்னர் சோதனைக்குள்ளாகி செய்த செயல்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
- திருத்தூதர் பயத்தினால் ஓடிவிட்டனர்.
- தலைமை குருவின் சேவகன் மாக்குஸ் என்பவரது காதை பேதுரு வெட்டினார்.
- இயேசுவை தெரியாது என பேதுரு மூன்று முறை மறுதலித்தார்.

iii. ஒழுக்க விழுமிய சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்புவதில் ஆட்சியாளரின் கடமைகளும் பொறுப்புக்களும் ஐந்து எழுதுக.
- அனைத்து மக்களின் அமைதி, நல்லிணக்கத்துக்காக உழைத்தல்.
- அதிக வரிகளால் மக்கள் மீது தேவையற்ற சுமையை சுமத்தாதிருத்தல்.
- மக்களினதும், நாட்டினதும் நிலையான வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டும்.
- சமூகத்தின் அனைத்து துறைகளிலும் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்த வேண்டும்.
- நாட்டின் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும்.

(05) i. பொதுநிலையினர் மறைதூதுப் பணியாற்றும் பக்திச் சபைகள் இரண்டின் பெயர்களைத் தருக.

- மரியாயின் சேனை
- திருஇருதய நாதர் சபை
- இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம்
- வின்சென் டி போல் சபை

ii. பொதுக்குருத்துவவத்தைப் பெற்ற அனைத்து கிறிஸ்தவர்களுக்குமுரிய மூவித பணிகளையும் பெயரிடுக.

- அரச செயற்பாடு
- குருத்துவ செயற்பாடு
- இறைவாக்கு செயற்பாடு

iii. இன்றைய சமுதாயத்தில் நிலவும் பிரச்சினைகளின் முன்னே இயற்கையைப் பாதுகாத்தல் தொடர்பாக, ஒரு சபையாகப் பொதுநிலையினர், துறவிகள் ஆகியோரது பொறுப்புக்களையும் கடமைகளையும் ஐந்து விடயங்களினூடாக எழுதிக் காட்டுக.

- டெங்கு வருவதை தவிர்த்தல்.
- போதைப்பொருள் பாவனை, விற்பனை என்பவற்றைத் தடுத்தல்.
- இயற்கை வளங்களான நீர், காற்று, நிலம் என்பவற்றைப் பாதுகாத்தல்.
- நோயாளிகள், ஏழைகள், முதியோரை பராமரித்தல்.
- இயற்கை பேரழிவுகளை.:.சீற்றத்தைத் தடுக்க நடவடிக்கைகளை எடுத்தல்.
- மனித உரிமைகளை பாதுகாத்தல்.
- வரலாற்றிடங்களைப் பாதுகாத்தல்.

(06) i. மரியன்னையை நாம் கௌரவிப்பதற்கான காரணங்கள் இரண்டு தருக.

- அவள் கடவுளின் தாய்
- ஜென்ம பாவமில்லாமல் உற்பவித்தவள்.
- இயேசுவின் பிறப்பின் முன்னரும் பின்னரும் கன்னியாகவே இருந்தாள்.
- அருள் நிறைவாக கிடைக்கப்பெற்றிருந்தார்.
- அவர் பாவத்திலிருந்து விடுவிக்கப் பட்டிருந்தார்.
- உடலுடனும், ஆன்மாவுடனும் விண்ணகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாள்.

ii. மரியன்னை திருச்சபையின் அன்னை என்பதை எடுத்துக்காட்ட மூன்று உதாரணங்கள் எழுதுக.

- சிலுவையில் இயேசு தனது தாய் மரியாளை தன் சீடருக்கு தாயாக ஒப்படைத்தமை.
- அன்னை மரியாள் இயேசுவின் விண்ணேற்பு வரை அவரது சீடர்களுடனேயே இருந்தார்.
- சீடர்களுடன் ஒரே மனதாக செபித்துக்கொண்டிருந்தார்.
- அன்னை மரியாள் தனது காட்சிகளினூடாக எமக்காக செபிப்பதை உறுதிசெய்துள்ளார்.

iii. மரியன்னையின் வாழ்க்கையின் மூலமும் காட்சிகளின் மூலமும் நாம் பெற்றுக்கொள்ளக் கூடிய செய்திகள் ஐந்தினை குறிப்பிடுக.

- அன்னை மரியா எப்போதும் இறைவனுக்கு கீழ்ப்படிந்தார்.
- கடவுளின் குரலுக்கு செவிமடுத்து அதன்படி வாழ்ந்தார்.
- அவர் தனது உறவினருக்கு (எலிசபெத்திற்கு) உதவி செய்தார்.
- உலக அமைதிக்காக செபமாலையை செபிக்கும்படி கேட்டவள்.

- ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் இறை இரக்கத்தைப் பெற அவர்களுக்குக் காட்சியளித்தார்.
- இயேசுவிற்கு முன் பலம்வாய்ந்த பரிந்து பேசுபவராக உள்ளார்.
- நெருக்கடி வேளைகளில் எமக்கு உதவுபவராக உள்ளார்.

(07) பின்வரும் தலைப்புக்களில் இரண்டைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.

**i. <u>புனித யோசேவாஸ் அடிகளார்.</u>**

- 21ம் திகதி இந்தியாவில் கோவா மாநிலத்தில் சான்கோவா என்னுமிடத்தில் பிறந்தார்.
- கி.பி. 1651 இல் சித்திரை மாதம் 21ம் திகதி பிறந்தார்.
- தந்தை - கிறிஸ்டோபர் வாஸ்
- தாய் மரிய மிராண்டா
- கி.பி. 1676 இல் ஒறத்தோறியன் சபையில் குருவானார்.
- தொழிலாளி வேடத்தில் இலங்கைக்கு வந்தார்.

<u>அவரது புதுமைகள்:</u>

- தெதுறு ஓயாவை கால்நடையாக கடந்தது.
- கண்டியில் மழைப் பொழியச் செய்தது.
- மதம் பிடித்த யானையை அடக்கியது.

- கண்டி மன்னன் 2ம் விமலதர்மசூரியனின் நன்மதிப்பு பெற்றவர்.
- சின்னம்மை தொற்றுநோயால் பாதிக்கப்பட்டோரை பராமரித்தார்.
- எளிமையான வாழ்க்கை வாழ்ந்தார்.
- பொதுநிலையினரிடையே தலைவர்களை நியமித்தார்.
- இலங்கையில் வடக்கு, தெற்கு மற்றும் மத்தியப் பகுதிகளில் பணிபுரிந்தார்.
- 16 ஜனவரி 1711ல் தனது 60வது வயதில் இறைவனடி சேர்ந்தார்.
- 24 வருடங்கள் பணியாற்றினார்.
- 14 ஜனவரி 2015ல் மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் இவரை புனித நிலைக்கு உயர்த்தினார்.

**ii. <u>மேன்மைதங்கிய திருத்தந்தை பிரான்சிஸ்</u>**

- இயற்பெயர் ஜோர்ஜ் மரிய பெர்கோலியோ
- ஆர்ஜென்டீனாவின் புவனெஸ்ஸரஸில் 17 மார்கழி 1936ல் பிற்நதார்.
- தந்தை மரிய ஜோஸ் பெர்காலியோ
- 11 மார்ச் 1958ல் இயேசு சபையில் இணைந்தார்.
- 13 மார்கழி 1969ல் குருவானார்.
- 266வது திருத்தந்தையானார் (13 மார்ச் 2013)
- கத்தோலிக்க திருஅவையில் முதன்முதலில் பிரான்சிஸ் எனும் பெயரைத் தேரந்துக்கொண்டவர்.
- இலங்கைக்கு வருகை தந்த இரண்டாவது திருத்தந்தை
- இயற்கையை பாதுகாக்க “ லவுடாத்தோ சீ ” எனும் மடலை எழுதினார்.

**iii. <u>இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கம்</u>**

- 13-19 வயதுடைய இளையோருக்கான ஒரு அமைப்பாகும்.
- மாணவர் பிரச்சினைகள், எதிர்நோக்குகள் பற்றி ஆராயப்படும்.
- தமது நம்பிக்கையின் படி வாழ அவர்களுக்கு உதவுதல்.
- ஜோசப் லியோ கார்டினல் கார்டிஜியினால் உருவாக்கப்பட்டது.

- பாரிசில் தலைமை பீடம் உள்ளது.
- 110 நாடுகளில் இவ்வியக்கம் செயல்படுகின்றது.
- 'நாம் புரட்சி செய்யவில்லை. நாம் புரட்சியாவோம்' என்பது அவர்களது விருது வாக்கு.

## iv. <u>மறைசாட்சியாவதன் மேன்மை</u>

- தொடக்ககால கிறிஸ்தவ சமூகத்தில் தோன்றியது.
- தொடக்ககால விசுவாசிகள் தமது நம்பிக்கைக்கு சாட்சிகளாக இரகத்தம் சிந்தியதால் மறைசாட்சிகளாயினர்.
- தமது நம்பிக்கைக்கு உண்மை சாட்சிகளாயினர்.
- முதல் மறைசாட்சி புனித ஸ்தேவான்
- முதல் மறைசாட்சியான திருத்தூதர் யாக்கோபு அவர்கள்
- புனித பேதுரு, பவுல் உட்பட அனைவரும் மறைசாட்சிகளாயினர்
- இயேசுவில் கொண்ட நம்பிக்கைக்காக தமது உயிரை தியாகம் செய்தோர்.
- அநேக தொடக்ககால கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாயினர்.

**வெளியீடு :**

**தேசிய மறைக்கல்வி, திருவிவிலியப்பணி நடுநிலையம்,**
**1ம் மாடி, இல. 19, பல்கம் இடம்,**
**கொட்டா வீதி, கொழும்பு - 08.**

**தொலைபேசி : 011 - 2685459**
**தொலை நகல் : 011 - 2665021**
**மின் அஞ்சல் : natcatbible@gmail.com**

விலை : ரூபா. **600/=**